வீடு கட்ட முடியும் என்பதற்காக, அவரே வசதான்குளத்தில் இருக்கிற ஆக்கிரமிப்பாளர்களை அகற்றியதற்குப் பிறகு, மறு நாள் காலையிலே பார்த்தால் நூற்றுக்கணக்கான குடிசைகள் உற்பத்தி ஆகிவிட்டதே? அப்படித்தான் ஆக்கிரமிப்பு வருகிறது.

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரி, குளங்களிலே ஆக்கிரமிப்புகளை அகற்றுகிற நேரத்தில் அந்த ஆக்கிரமிப்புகளைச் செய்து இருக்கக்கூடியவர்கள் தடை உத்தரவு பெற்றுவிடுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள்; அப்படித் தடை உத்திரவை பெறமுடியாத வகையில் நீதிமன்றங்களிலே துறையின் மூலமாக 'கேவியேட் பெட்டிஷன்' போடுவதன் மூலம் தடை உத்திரவுப் பெற முடியாமல் செய்வதோடு அந்த இடைப்பட்ட காலத்திலே உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு துறை முன்வருமா என அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கிற ஏரி, குளங்கள், ஆறுகள் எல்லாவற்றிற்கும் 'கேவியேட் பெட்டிஷன்' போடுவது என்பது இயலாத காரியம். இருந்தாலும், எங்கெங்கு தடை உத்திரவு வாங்குகிறார்களோ அவற்றை நீக்குவதற்கு அரசு விரைந்து செயல்படுகிறது. பொது வாக பொதுப்பணித் துறைக்கு ஆக்கிரமிப்புதளை அகற்றுங்கள் என்று கேட்க முடியுமே தவிர, பிராசிக்கியூஷன் செய்கிற அதிகாரம் பொதுப் பணித்துறைக்கு இல்லை. ஆகையினால் பொது பணித்துறைக்கும், காட்டு இலாகாவினருக்கு இருக்கிற அத்தகைய அதிகாரம் கொடுத்தால், இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் வேகமாகச் செய்ய முடியும்.

திரு. வ. முல்லைவேந்தன்: தலைவர் அவர்களே, காவேரிக் கரை போன்ற இடங்களிலும், பொதுவாகப் போக்குவரத்து உள்ள இடங்களிலும் மனிதர்கள் ஆக்கிரமிப்புச் செய்தால் அகற்றி விடுகிறோம்; ஆனால் பிள்ளைகுட்டி இல்லாத முருகன், விநாயகர் போன்றவர்கள் எல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்; தலைவர் அவர்களே, அவர் களும் அந்தப் பாசனத்திற்குக் குறுக்கே நின்றால், அவர்களும் அகற்றப்படுவார்கள்.

மின் துண்டிப்புக் கட்டணம்

*3214 பேராசிரியர் க. பொன்னுசாமி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

1990 ஏப்ரல் 2]

(அ) விவசாய மின் மோட்டார் தொடர்பான மின் துண்டிப்புக் கட்டணம் அண்மையில் உயர்த்தப் பட்டதைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு குறைக்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரி செய்தல்

*3251 திரு. ஆ. பாலையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் அழுத்தம் குறைந்த டிரான்ஸ்பார்மர்களை சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மின் அழுத்தக் குறைவை சீர் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(9.25 மணி)

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களிலும் மின்னழுத்தம் மிகக் குறைவாகவே இருக்கிறது. மின் விளக்குகளெல்லாம் வெளிச்சம் தருவதற்குப் பதிலாக அலங்காரப் பொருட்களாகவே காட்சி அளிக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கப்பியறை, மேல்பாறை, ஈத்தவிளை போன்ற பகுதிகளில்கூட நீண்டகாலமாக இந்த நிலை இருக்கிறது. அங்கெல்லாம் டிரான்ஸ்பார்மார்களை மாற்றுவதற்குப் பொருட்கள் இல்லை, எனவே மாற்றுவதில் காலதாமதப்படுகிறது என்று மின் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, அதற்குத் தேவையான பொருட்களை உடனடியாக வழங்கி அங்கு மின்னழுத்தத்தை அதிகப்படுத்தி, அங்கே அலங்காரப் பொருட்களாக இருக்கின்ற விளக்குகளை எரிய வைப்பதற்கு, வெளிச்சம் தருவதற்கு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மின்னழுத்தம் குறைவாக இருப்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. எனவேதான் அதை நிவர்த்தி செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று